ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா
உயர்நிலைப் பள்ளி,ஈரோடு
ஏழாம் வகுப்பு : இரண்டாம் பருவம் :தமிழ்

குறுவினா விடைகள்:

1.திரிகடுகம் - பெயர்க்காரணம் கூறுக.

சுக்கு , மிளகு ,திப்பிலி ஆகிய 3 மருந்துப் பொருட்கள் சேர்ந்த திரிகடுகம் உடல்நோயைப் போக்கும் அதுபோல இந்நூற் பாடற்கருத்துகள் 3 ம் மனநோயைப் போக்கும்.

2.நல்லாதனார் - குறிப்பு வரைக.

திரிகடுகத்தின் ஆசிரியர் நல்லாதனார்.

திருநெல்வேலி - திருத்து ஊரைச் சார்ந்தவர்.

வைணவர்.

சங்ககாலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்.

3.கவி இரவீந்திரநாத் தாகூரின் ஈர்ப்பான நடைக்குக் காரணம் என்ன?

தாகூரின் ஆங்கில அறிவு மட்டுமல்ல, தாய்மொழி அறிவும் தான் அவரின் ஈர்ப்பான நடைக்குக் காரணம் ஆகும்.

4.மதன்மோகன் மாளவியாவின் பேச்சுக்குக் காந்தியடிகள் கூறும் உவமைகள் யாவை?

ஆங்கிலப் பேச்சு வெள்ளியைப் போல ,

தாய்மொழிப் பேச்சு தங்கத்தைப் போல.

5.யார் யாரைச் சாதனையாளர்களாகக் கண்டு காந்தியடிகள் மகிழ்ச்சியடைகின்றார்?

ஜெகதீஷ் சந்திரபோஸ் , பி.சி.இராய்

6.திருவாரூர் நான்மணிமாலை - பெயர்க் காரணம் கூறுக.

முத்து, பவளம் , மாணிக்கம் , மரகதம் ஆகிய 4 ம் சேர்ந்தது நான்மணிமாலை.

திருவாரூர் தியாகராசர் பற்றி 4 வகைப் பாக்களால் அமைந்த நூல் திருவாரூர் நான்மணிமாலை.

7.குமரகுருபரர் - குறிப்பு எழுதுக.

பெயர் : குமரகுருபரர்

பெற்றோர்: சண்முகசிகாமணிக் கவிராயர் - சிவகாம சுந்தரி.

ஊர் : திருவைகுண்டம்

படைப்புகள்: நீதிநெறி விளக்கம் , முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ் , கந்தர் கலி வெண்பா முதலியன.

காலம் : கி.பி.17

8.என்பணிந்த தென்கமலை ஈசனார் யார்?

தியாகராசனார்(சிவபெருமான்)

9.இறைவர் யாருக்காக மண் சுமந்தார்?

இறைவர் , வந்தி என்னும் கிழவிக்காக மண் சுமந்தார்.

10.வாணிதாசன் குறிப்பு வரைக.

இயற்பெயர் : எத்திராசுலு

ஊர் : வில்லியனூர்

பெற்றோர் : அரங்க.திருக்காமு - துளசியம்மாள்.

பட்டங்கள் : பாவலர் மணி ,கவிஞர் ஏறு

11.பள்ளிக்குச் செல்லும் ஒழுங்கு பற்றி வாணிதாசன் குறிப்பிடுவன யாவை?

குளித்து ,தலை சீவி ,தூய ஆடை அணிந்து,நண்பர்களுடன் சேர்ந்து பள்ளிக்குச் செல்லவேண்டும்.

12.கல்வி கற்பிப்பவர் எத்தகையவர்?

கற்பிப்பவர் கண்கொடுப்பவரைப் போன்றவர்.

13.கோவலன் பொட்டல் என அது வழங்கப்படுவதற்குக் காரணம் என்ன?

கோவலன் கொலை செய்யப்பட்ட இடம் . கோவலன் பொட்டல் என வழங்கப்படுகிறது.

14.திருமலை நாயக்கர் செய்த கோவில் பணிகள் யாவை?

மீனாட்சியம்மன் கோவிலுக்கு திருப்பணிகள் பல செய்தார்.

புதுமண்டபத்தைக் கட்டினார்.

SSM



ச.சேட்டு மதார்சா ,எம்.ஏ,எம்.ஏ,எம்.பில்,பி.எட்,பிஹெச்.டி,பிஜிடிடிஆர். பட்டதாரி ஆசிரியர் - தமிழ் ,மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி, காவேரி சாலை,ஈரோடு -638001, அலைபேசி:9994142883 , 8883681115,settumatharsha@gmail.com

சித்திரைத் திருவிழா சிறப்புற நடைபெறச் செய்தார்.

15.திருமலை நாயக்கர் மகாலின் சிறப்புகள் யாவை?

கலைநயத்தில் தாஜ்மகால் போன்றது.

மகாலில் சிறந்த ஓவியங்களை அமைத்தார்.

மரத்தைப் பயன்படுத்தாமல் கட்டப்பட்டது.

ஒவ்வொரு தூணும் 82 அடி உயரம், 19 அடி சுற்றளவுகொண்டது.

16.முத்து முத்ததான வியர்வைக்குக் கிடைத்த பயன் என்ன?

நெல்மணிகள் கொத்துக் கொத்தாக விளைந்திருப்பது - முத்து முத்ததான வியர்வைக்குக் கிடைத்த பயன் ஆகும்.

17.உழவர் எவ்வாறு நெல்லை வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்க்கின்றனர்?

நெற்கதிர்களை அறுவடை செய்து,பின்னர் போர் அடித்துப் பதர் நீக்கிய நெல்களை வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்க்கின்றனர்.

18.விளைந்த நெற்கதிரைக் கவிஞர் எவ்வாறு உவமிக்கிறார்?

விளைந்த நெற்கதிர் , தன் தாய் பூமிக்கு ஆசை முத்தம் தருவதைப் போல கவிஞர் உவமிக்கிறார்.

19. திருச்செந்திற் கலம்பகம் - நூற்குறிப்பு வரைக.

திருச்செந்தூர் முருகன் மீது பாடப்பட்ட கலம்பகம்.

இதனை இயற்றியவர் : சுவாமி நாத தேசிகர்.

20.அம்மானை - விளக்குக.

பெண்கள் விளையாட்டுகளுள் ஒன்று.

ஒருத்தி கருத்தைக் கூற ,மற்றொருத்தி வினா எழுப்ப , மற்றொருத்தி விடை கூற ,ஒவ்வொருவரும் காயை உருட்டி விளையாடுவர்.

21.கைத்தறி நெசவுக்குரிய கருவிகள் யாவை?

அச்சு மரம் , விழுது கம்பு , படை மரம் , குத்துக் கம்பி ,ஓடம் ,ஊடைக் குழல் ,பாவு.

22. கைத்தறி நெசவு நடைபெறும் ஊர்கள் நான்கனை எழுதுக.

ஆரணி , மதுரை , கோவை ,ஈரோடு

23.ஆடையின் தேவையைப் பற்றி விளக்கும் பழமொழிகளை எழுதுக.

1.ஆடையில்லாத மனிதன் அரை மனிதன்.

2.ஆள் பாதி , ஆடை பாதி.

24.கைத்தறி ஆடைகளின் புகழ் பரப்பியவர்கள் யாவர்?

1.காந்தியடிகள் 2.காமராசர் 3.பெரியார் 4.பேரறிஞர் அண்ணா

சிறுவினா விடைகள்

1.தூய்மை உடையாரின் செயல்கள் யாவை?

உண்ணுவதற்கு முன் குளித்தல்,

பொய்சாட்சி சொல்லாமல் இருத்தல்,

ஒழுக்கம் குறையாமை

- ஆகிய மூன்றும் தூய்மை உடையாரின் செயல்கள் ஆகும்.

2.நன்றறியும் மாந்தர் செயல்கள் யாவை?

ஏழைகளுக்குப் பொருள் கொடுத்தல்,

நிலையாமை அறிந்து நல்வழி நடத்தல்,

பிற உயிர்களைத் துன்புறுத்தாமை

-ஆகியவை நன்றறியும் மாந்தர் செயல்கள் ஆகும்.

3.புதரில் விதைத்த விதைகளாவன எவை?

ஆற்றல் இல்லாதவன் தலைமை,

ஒழுக்கம் இல்லாதவன் தவம்,

ஒழுக்கம் இல்லாதவன் அழகு

- ஆகியவை புதரில் விதைத்த விதைகளாகும்.

SSM



ச.சேட்டு மதார்சா ,எம்.ஏ,எம்.ஏ,எம்.பில்,பி.எட்,பிஹெச்.டி,பிஜிடிடிஆர். பட்டதாரி ஆசிரியர் - தமிழ் ,மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி, காவேரி சாலை,ஈரோடு -638001, அலைபேசி:9994142883 , 8883681115,settumatharsha@gmail.com

**4.பயிற்று மொழி குறித்துக் காந்தியடிகள் உரைப்பன யாவை?**

**பயிற்று மொழி பற்றிய முடிவுக்கு வருவது கல்வி கற்பித்தலில் நாம் செய்ய வேண்டிய முதல்பணி.**

**பயிற்று மொழி குறித்துச் சிந்திக்காமல் கற்பிப்பது அடித்தளம் இல்லாமல் கட்டிடம் எழுப்புவதைப் போன்றது.**

**பயிற்று மொழி தாய்மொழியாகவே இருத்தல் வேண்டும்.**

**5.மொழியைக் குறை கூறுபவர் பற்றிக் காந்தியடிகள் உரைப்பன யாவை?**

**வேலை தெரியாத தொழிலாளி , தன் கருவியின் மீது கோபம் கொண்டானாம்.**

**மொழி முழுமை பெற்றதாக இல்லை என்பவர்கள் இதைப் போலத்தான்.**

**குறைபாடு மொழியில் இல்லை அதைப் பயன்படுத்துபவர்களிடம் தான் இருக்கிறது.**

**6.பள்ளி எவ்வாறு அமைய வேண்டுமென்று காந்தியடிகள் உரைக்கின்றார்?**

**பள்ளிக் கூடம் வீட்டைப் போல இருக்க வேண்டும்.**

**குழந்தைகளுக்கு வீடு மற்றும் பள்ளியில் தோன்றும் எண்ணங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருத்தல் வேண்டும்.**

**அறியாத மொழியில் கற்பிப்பது இந்த நல்லுறவைக் குலைத்துவிடும்.**

**7.அயல்மொழி குறித்து காந்தியடிகள் கூறும் கருத்துகள் யாவை?**

**பயிற்றுமொழியாகத் தாய்மொழியாக இருந்தால் , ஆங்கில அறிவு பாதிக்கப்படுமா? என்ற சிந்தனையே தேவையில்லை.**

**அயல்மொழி மீது விருப்பத்தைத் தோற்றுவிப்பதோ அல்லது ஊக்கம் அளிப்பதோ தேவையில்லை.**

**8.பள்ளிக்கு எவ்வாறு செல்ல வேண்டுமென வாணிதாசன் குறிப்பிடுகிறார்?**

**குளித்து ,தலை சீவி ,தூய ஆடை அணிந்து,நண்பர்களுடன் சேர்ந்து சிரித்துப் பேசி பாடநூல்கள் ஏந்தி ஒற்றுமையாகப் பள்ளிக்குச் செல்லவேண்டும்.**

**9.மதுரையின் மாண்புகளை எழுதுக.**

**சிவன் சுந்தர பாண்டியனாக மதுரையை ஆண்டார்.**

**பார்வதி தேவி தாடதகையாக மதுரையை ஆண்டார்.**

**அரிமர்த்தனனுக்கு அமைச்சராக மாணிக்கவாசகர் மதுரையில் இருந்தார்.**

**ஞானசம்பந்தர் சைவத்தைக் காத்தார்.**

**பாண்டிய மன்னர் பலர் புலவர்களாக விளங்கினர்.**

**மதுரை மீனாட்சி வீற்றிருப்பது மதுரையில் தான்.**

**10.மதுரையில் நடைபெற்ற புராண நிகழ்வுகளை எழுதுக.**

**1. சிவன் சுந்தர பாண்டியனாக மதுரையை ஆண்ட நிகழ்வு.**

**2.மதுரையை அழிக்க வருணன் 7 மேகங்களை அனுப்ப , பாண்டியன் இறைவனிடம் முறையிட, இறைவன் அனுப்பிய 4 மேகங்கள் மாடங்களாய் நின்று மதுரையைக் காத்த நிகழ்வு.**

**3.இறைவன் தருமிக்குப் பாடலைக் கொடுத்த நிகழ்வு.**

**4.குமரகுருபரருக்கு மீனாட்சியம்மை முத்து மாலை பரிசாகக் கொடுத்த நிகழ்வு.**

**11.கவிஞர் மருதகாசி உழவரின் செயல்களாய்க் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

**மழையால் நனைந்த ஈரமான நிலத்தை உழுது, விதை விதைக்கின்றனர்.**

**வெயில் பாராமல் உழைக்கின்றனர்.**

**நெல்மணிகள் வளர்கின்றன.**

**நெற்கதிர்களை அறுவடை செய்து,பின்னர் போர் அடித்துப் பதர் நீக்கிய நெல்களை வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்க்கின்றனர்.**



ச.சேட்டு மதார்சா ,எம்.ஏ,எம்.ஏ,எம்.பில்,பி.எட்,பிஹெச்.டி,பிஜிடிடிஆர். பட்டதாரி ஆசிரியர் - தமிழ் ,மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி, காவேரி சாலை,ஈரோடு -638001, அலைபேசி:9994142883 , 8883681115,settumatharsha@gmail.com

**12. முருகப் பெருமானின் சிறப்புகளை எழுதுக.**

**நெடிய வேலை ஏந்தியவன்.**

**திருச்செந்தூரில் வீற்றிருப்பவன்.**

**உயிர்களைப் படைத்தவன்.**

**பிரணவ மந்திரத்தின் பொருள் அறிந்தவன்.**

**பிரணவ மந்திரத்தின் பொருள் அறியாததால் பிரம்மனைச் சிறையில் அடைத்தவன்.**

**13.அழகிய ஆடை எவ்வாறு உருவாகின்றது.?**

**பருத்தியைப் பஞ்சாக்குவர் .**

**பஞ்சை நூல் நூற்று ஆடையாக நெய்வர்.**

**பின்னர் வண்ணமூட்டுதல் , பூவேலைப்பாடு ,கரை அழகுபடுத்தல்,மணமூட்டல் ,பளபளப்பாக்கல்**

- **என பல நிலைக்குப் பிறகு அழகிய ஆடையாக உருவாகின்றது.**

**14.பட்டுநூல் எவ்வாறு உருவாகின்றது?**

**பட்டுப்புழு வளர்க்கப்படும். அப்புழு தன் வாய் திரவத்தால் தன்னைச் சுற்றிக் கூடுகட்டிக் கொள்ளும்.**

**புழு வெளியேறுவதற்கு முன் அக் கூட்டைக் கொதிநீரில் போட்டு,**

**அக் கூட்டிலிருந்து எடுக்கப்படும் நூலில் இருந்து பட்டுநூல் உருவாகின்றது.**

**துணைப்பாடம்:**

**1.அறிவு நுட்பம்**

**முன்னுரை :**

**ஓவியர் ராம்கி அவர்கள் எழுதிய அறிவு நுட்பம் என்னும் கதையினை இனிக் காண்போம்.**

**பாலையூரும் காளியப்பனும்:**

**பாலையூரில் காளியப்பன் என்ற முரடன் இருந்தான்.அவன் அவ்வூர்க் காரர்களை வீண் வம்புக்கு இழுப்பான்.அவன் தொல்லை தாங்காமல் , அறிவாளியான பெரியவர் ஒருவரிடம் மக்கள் சொன்னனர்.அவரும் காளியப்பனை அடக்க திட்டம் ஒன்றை வகுத்துக் கொடுத்தார்.**

**காளியப்பனுக்குக் குழப்பம்:**

**பெரியவரின் திட்டப்படி சிறுவன் ,பெரியவர் , மருத்துவர் எனப் பலரும் காளியப்பனுக்கு உடல் நலம் சரியில்லை என்று அவனிடமே சொல்லி அவனைப் படுக்கையில் படுக்க வைத்து விட்டனர்.**

**காளியப்பனின் மனமாற்றம்:**

**ஊர் மக்கள் எப்படியோ ஒரு படுபாவி ஒழிந்தான் என்று பேசிக் கொண்டு இருந்தது, காளியப்பன் காதில் விழுந்தது.மக்களிடம் தான் திருந்திவிட்டதாகவும் இனி தீங்கு செய்ய மாட்டேன் என்றும் உறுதி கூறினான்.**

**முடிவுரை:**

**பெரியவரின் அறிவு நுட்பத்தால் காளியப்பனின் கொடுமை ஒழிந்தது.ஊர் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.**

**2.நிலைத்த செல்வம் கல்விச் செல்வம்.**

**முன்னுரை:**

**நிலைத்த செல்வம் கல்விச் செல்வம் என்பதை புலவர் நகை வியாபாரிக்கு உணர்த்தியதைக் காண்போம்.**

**புலவரும் நகை வியாபாரியும்:**

**ஒரு வழிப் பாதை வழியாகப் புலவரும் நகை வியாபாரியும் சென்று கொண்டிருந்தனர். தங்கம் ,வைரம் இருக்கிறது , உன்னிடம் என்ன உள்ளது எனப் புலவரிடம் நகை வியாபாரி கேட்டார்.அதற்குப் புலவர் திருட முடியாத கல்விச் செல்வம் உள்ளது என்றார்.**

**திருடர்களின் மனமாற்றம்:**

**நகை வியாபாரியிடம் இருந்ததங்கம் ,வைரம் ஆகியவற்றைத் திருடர்கள் பறித்துக் கொண்டனர்.புலவர் தன்னிடம் கல்விச்**



ச.சேட்டு மதார்சா ,எம்.ஏ,எம்.ஏ,எம்.பில்,பி.எட்,பிஹெச்.டி,பிஜிடிடிஆர். பட்டதாரி ஆசிரியர் - தமிழ் ,மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி, காவேரி சாலை,ஈரோடு -638001, அலைபேசி:9994142883 , 8883681115,settumatharsha@gmail.com

SSM

செல்வம் மட்டுமே உள்ளது என்று சொல்லி பாடலைப் பாடத் திருடர்கள் மனம் திருந்தி ,திருட்டுத் தொழிலை விட்டுவிட்டு நகைகளைப் புலவருக்கு அன்பளிப்பாக் கொடுத்து விட்டனர்.

**முடிவுரை:**

புலவர் நகை வியாபாரியிடம் நகையைக் கொடுக்க கல்விச் செல்வமே சிறந்தது என்று சொல்லி புலவரின் காலில் செல்வந்தர் வீழ்ந்து வணங்கினார்.

**கடிதம்**

**1.ஊர்த் திருவிழாவிற்கு வருமாறு உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.**

25,தமிழ் நகர்,

ஈரோடு -1.

தேதி:

அன்புள்ள நண்பனுக்கு,

நான் இங்கு நலம். நீயும் உன் குடும்பமும் அங்கு நலமா? அடுத்த மாதம் எங்கள் ஊரில் மாரியம்மன் திருவிழா நடைபெற உள்ளது.அது மிகவும் சிறப்பாக இருக்கும்.பொங்கல் வைத்தல், பூ மிதித்தல் ,கம்பம் பிடுங்குதல், மஞ்சள் நீராடல் என ஒருவாரம் ஊரே விழாக் கோலகலமாக இருக்கும்.

பாட்டு மன்றம் , பட்டி மன்றம் , நாடகம் ஆகியவையும் உண்டு.எனவே , நீ அவசியம் பெற்றோருடன் வந்து விழாவைச் சிறப்பிக்க வேண்டும்.மற்றவை நேரில்.

இப்படிக்கு,

(பெயர்)

உறை மேல் முகவரி:

பெறுதல்:

சே.சிற்பி,

122,பெரியார் வீதி,

கோவை-2.

**பொதுக்கட்டுரை**

**1.மாமரம் - தன் வரலாறு கூறுதல்**

**முன்னுரை:**

நண்பர்களே ! நான் தான் மாமரம் பேசுகின்றேன்.

**வரலாறு:**

நீங்கள் தின்று வீசிய மாங்கொட்டைகள் தான் , தோட்டத்தில் விழுந்து , மண்ணில் புதைந்து , மாங்கன்றாக வளர்கிறேன்.

முருகனும் விநாயகனும் மாம்பழத்திற்குப் போட்டி போட்ட வரலாற்றை நீற்கள் அறிவீர்கள்.

**வகைகள்:**

பள்ளி , ருமேனியா , நீலம் , கிளி மூக்கு , மல்கோவா ,பச்சரிசி என பல வகையாக இருந்தாலும் ஒற்றுமையாகவே இருக்கிறோம்.

**பயன்கள்:**

வெயிலுக்கு நிழல் , பறவைகள் தங்க இடம் ,மங்கல நிகழ்ச்சியில் தோரணம் என பல வழிகளில் நான் பயன்படுகின்றேன்.

**முடிவுரை:**

வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்பீர் ! அது ஏன் நானாக இருக்கக் கூடாது. வருகிறேன் ! நன்றி!

SSM



ச.சேட்டு மதார்சா ,எம்.ஏ,எம்.ஏ,எம்.பில்,பி.எட்,பிஹெச்.டி,பிஜிடிடிஆர். பட்டதாரி ஆசிரியர் - தமிழ் ,மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி, காவேரி சாலை,ஈரோடு -638001, அலைபேசி:9994142883 , 8883681115,settumatharsha@gmail.com